FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

UNDER SECTION 173-BNSS
BNSS பிரிவு 173-இன் கீழ்

முதல் தகவல் அறிக்கை
(Under Section ~~154 Cr~~.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு ~~154~~ இன் கீழ்)

C 8165123

11/AC/2026

1. District : மாவட்டம் கரூர் | PS: கரூர் நகர் மகளிர் காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: மு.த.அ. எண் | Date: நாள் 26.10.2026

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION | Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: ACT 1988, AS AMENDED IN | Sections பிரிவுகள்: 7, 7A/W 12
(iii) Act சட்டம்: 2018. | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 23.10.2026 | Date to : நாள் வரை 15.40 மணி முதல் 21.00 மணி வரை
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2026 | Time : நேரம் 11.00 HRS
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.10.2026 | Time : நேரம் 11.00 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4 கி.மீ வடக்கு.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துறை அலுவலகம், கரூர் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. சங்கர் | (b) Father's/ ~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர் முருகேசன்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1991 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் உதவியாளர் | (g) Address : முகவரி மாவட்ட ஒவலைவாய்ப்பு மற்றும் தொழிற்நெறி அலுவலகம் வழிகாட்டுனையும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அலுவலகம், கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1, திரு. K. சுபாஷ் திருவேணன், த/பெ. கந்தசாமி, உதவியாளர் -நிலை-3, நகர் ஊரமைப்பு துறை, கரூர் மாவட்டம். 2, திரு. M. முருகேசன், S/o மாணிக்கம், NO:32, அங்காரமேடு பாளையம், LNS அஞ்சல், கரூர், 3, திரு. R. தங்கவேல், S/o ராமசாமி, நாடக்காபட்டி, தோகைமலை. அஞ்சல் குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம், 4, திரு. S. அதீஸ், த/பெ. திவாகர், 28- காந்தி நகர், சிக்கலியூர் அஞ்சல், கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்து தரப்பட்டுள்ளது

இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed க.சாமிதுரை Rank ஆய்வாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS உ.தா.க.ஸ்டே. அதி. on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26.10.2026 AT. 16.00 HRS.

Name: பெயர் P.K. ஆரோன்
Rank: நிலை .....No. எண் .....
காவல் துணை கண்காணிப்பாளர்
உ.தா.க.ஸ்டே. அதி.

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.11/AC/2026 u/s 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018.

எதிரிகள்:

1. திரு.பூபாலகிருஷ்ணன்(35/2026),
த/பெ. கந்தசாமி,
வரைவாளர் நிலை-3,
நகர் ஊரமைப்பு துறை,
கரூர் மாவட்டம்.

2.திரு.கேசவன், (23/2026),
த/பெ.ஸ்ரீனிவாசன்,
32 -அரிக்காரம்பாளையம்,
LNS அஞ்சல், கரூர். **(தனி நபர்)**

3.திரு.தங்கமூர்த்தி (50/2026),
த/பெ.ராமசாமி,
நாடக்காபட்டி,
தோகைமலை அஞ்சல்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம். **(தனி நபர்)**

4. திரு.சதீஸ் (29/2026),
த/பெ.சிவசாமி,
2B - காந்தி நகர்,
சுக்காலியூர் அஞ்சல்,
கரூர் வட்டம்
கரூர் மாவட்டம். **(தனி நபர்)**

அய்யா, பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் மாவட்டம், கரூர் டவுன் லட்சுமிபுரம் வடக்கு தெருவில் உள்ள கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பணிபுரியும் உதவி இயக்குநர் திருமதி.சபரிபிரியங்கா மற்றும் அவரது அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக பணியாளர்கள் நில உபயோக மாற்றம் (Land Re-Clasification), மனைப்பிரிவு அனுமதி மற்றும் கட்டிட வரைபட திட்ட அனுமதி கேட்டு ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் அனுமதியற்ற மனைபிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்கும்படி கேட்டு பெறப்படும் மனுக்கள் மீது களஆய்வு செய்து ஒப்புதல் வழங்க லஞ்சமாக பணத்தை நேரடியாகவும் மற்றும் கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பதிவு பெற்ற பொறியாளர்கள் மூலமும் பெற்று வருவதாக நம்பதகுந்த தகவலின் அடிப்படையில் 23.10.2026 ஆம் தேதி 15.40 மணிமுதல் 21.00 மணி வரை நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் M.சங்கர், உதவியாளர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்நெறி வழிகாட்டு மையம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அலுவலகம், கரூர் மாவட்டம் என்பவர் 24.10.2026 ஆம் தேதி பகல் 11.00 மணிக்கு கொடுத்த புகார் மனுவை பெற்று சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை உயர் அதிகாரிகள் மற்றும் சட்ட ஆலோசகர்களிடம் தக்க அறிவுரை பெற்ற பின்னர், இன்று 26.10.2026 ஆம் தேதி பகல் 12.00 மணிக்கு கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/AC/2026 பிரிவு 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் கீழ் முதல் தகவல் அறிக்கையில் மார்ஜனில் கண்ட 4 எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.M.சங்கர், உதவியாளர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்நெறி வழிகாட்டு மையம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அலுவலகம், கரூர் மாவட்டம், பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர். அய்யா, பொருள் : 23.10.2026-ம் தேதியன்று கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் - திடீர் சோதனை மேற்கொண்ட போது கைப்பற்றிய பணம்

ரூ.25,000/-, சந்தேகத்திற்கிடமான வகையில் நடைபெற்ற வங்கி பணபரிவர்த்தனை ரூ.87,000/- மற்றும் ஆவணத்தை மேல் நடவடிக்கைக்காக ஒப்படைத்தல் மற்றும் நடவடிக்கை எடுக்க கோருதல் சம்மந்தமாக. பார்வை : திடீர் சோதனையின் போது தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள், நாள் 23.10.2026. நான் 23.10.2026-ம் தேதியன்று அலுவலகத்தில் பணியில் இருந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள் என்னிடம் கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவினருடன் இணைந்து திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள அரசு சாட்சி தேவைப்படுவதாகவும் அதற்காக என்னை கரூர் ஊ.த.க. பிரிவு அலுவலகத்துக்கு நேரில் சென்று அறிக்கை செய்யுமாறும் கேட்டுக் கொண்டதன் பேரில், நான் பிற்பகல் 14.00 மணியளவில் கரூர் ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு நேரில் வந்து அறிக்கை செய்தேன். அப்போது கரூர் மாவட்டம், பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் செயல்படும் இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகத்திலிருந்து, திரு.K.பாண்டியன், உதவியாளர் என்பவரும் அதே அலுவலுக்காக வந்து அறிக்கை செய்தார். அப்போது தாங்கள் கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பணிபுரியும் உதவி இயக்குநர் திருமதி.சபரிபிரியங்கா மற்றும் அவரது அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக பணியாளர்கள் நில உபயோக மாற்றம் (Land Re-Clasification), மனைப்பிரிவு அனுமதி மற்றும் கட்டிட வரைபட திட்ட அனுமதி கேட்டு ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் அனுமதியற்ற மனைபிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்கும்படி கேட்டு பெறப்படும் மனுக்கள் மீது களஆய்வு செய்து ஒப்புதல் வழங்க லஞ்சமாக பணத்தை நேரடியாகவும் மற்றும் கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பதிவு பெற்ற பொறியாளர்கள் மூலமும் பெற்று வருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் பேரில் மேற்குறிப்பிட்ட கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளும்போது அரசுதரப்பு சாட்சியாக உடனிருக்குமாறு சொன்னதன் பேரில் தங்கள் காவல் குழுவினருடன் நானும், மற்றொரு அரசு சாட்சியும் பிற்பகல் சுமார் 15.00 மணிக்கு நிலையம் விட்டு புறப்பட்டு சுமார் 15.30 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளரோடு நானும் மற்றொரு அரசு சாட்சி திரு.பாண்டியன், மற்றும் காவலர் குழுவினரும் திடீர் சோதனை செய்வதற்காக கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தும், அலுவலகத்தில் இருந்தவர்களிடம் காவல் துணை கண்காணிப்பாளர், தன்னையும், தன்னுடன் இருந்த காவல் ஆய்வாளர், என்னையும், என்னுடன் இருந்த மற்றொரு அரசு சாட்சி மற்றும் காவல் குழுவினரை அறிமுகம் செய்து கொண்டிருந்தபோது பகல் சுமார் 02.00 மணிக்கு மதிய உணவிற்கு வீட்டிற்கு சென்றுவிட்டு அலுவலகம் வந்ததாக சொல்லி உதவி இயக்குநர் திருமதி.சபரிபிரியங்கா அவர்கள், அங்கிருந்த காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் அறிமுகம் செய்து கொண்டார். காவல் துணை கண்காணிப்பாளர் உதவி இயக்குநரிடமும், அலுவலகத்திலிருந்த பணியாளர்களிடமும் அலுவலகத்தை திடீர் சோதனையிட வந்ததாக

தெரிவித்து பணியாளர்கள் அனைவரையும் அவரவர்கள் இருக்கை பணியை தொடர்ந்து பார்க்குமாறு கேட்டுக்கொண்டு அதன்பிறகு சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனை மாலை 15.40 மணிக்கு தொடங்கப்பட்டது. இந்த அலுவலகமானது கரூர் லட்சுமிபுரம் வடக்கு சாலையில் வடக்கு பார்த்த நுழை வாயிலுடன் முதல் தளத்தில் தனியார் கட்டிடத்தில் உள்ளது. அதில் தரைத்தளத்தில் உள்ள வீட்டில் கட்டிடத்தின் உரிமையாளர் குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், முதல் தளத்தில் இயங்கி வரும் தங்களது அலுவலத்திற்கு ரூ.24,900/- மாத வாடகையாக அரசு கணக்கில் இருந்து செலுத்தி வருவதாகவும் உதவி இயக்குநர் தெரிவித்தார். மேற்படி அலுவலக நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்ததும் ஹால் சுமார் 16x30 அடி அளவு கொண்டதாக இருந்தது. அந்த ஹாலில் நுழைவாயிலில் கிழக்கு பார்த்தவாறு திருமதி.கிருஷ்ணஜோதி, உதவியாளர் என்பவரது இருக்கையும், அவரது இருக்கைக்கு வலது பக்கமாக திரு.கோபாலகிருஷ்ணன், சர்வேயர் என்பவரது இருக்கையும், அவரது இருக்கைக்கு வலது பக்கமாக திரு.சதீஸ், தட்டச்சர் என்பவரது இருக்கையும் உள்ளது. மேலும், மேற்படி ஹாலின் நுழைவாயிலில் தெற்கு பார்த்தவாறு திரு.விஜயகுமார், சர்வேயர் என்பவரது இருக்கையும், அவரது இருக்கைக்கு எதிரே திருமதி.பைஜீன்னிஷா, மேற்பார்வையாளர் என்பவரது இருக்கையும், அவரது இருக்கைக்கு இடது பக்கமாக திரு.பூபதி, வரைவாளர் நிலை-3 என்பவரது இருக்கையும், அவரது இருக்கைக்கு இடது பக்கமாக திரு.பூபாலகிருஷ்ணன், வரைவாளர் நிலை-3 என்பவரது இருக்கையும், அவரது இருக்கைக்கு இடது பக்கமாக வடக்கு பார்த்தவாறு திரு.பிரகாசன், மேற்பார்வையாளர் என்பவரது இருக்கையும், அவரது இருக்கைக்கு இடது பக்கமாக வடக்கு பார்த்தவாறு திரு.செல்வராஜ், அலுவலக உதவியாளர் என்பவரது இருக்கையும் இருந்தது. மேற்படி பணியாளர்களின் இருக்கைகளுக்கு முன்பு போடப்பட்டிருந்த டேபிள்களையும், அவரவர் உடைமைகளையும் சோதனை செய்தபோது அதில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை. மேற்படி ஹாலின் தென்மேற்கு மூலையில் சுமார் 10 x 10 அடி அளவுள்ள அறையில் ஒரு Executive டேபிள் ரோலிங் சேருடன் வடக்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்ததில் உதவி இயக்குநர் திருமதி.சபரிபிரியங்கா அவர்கள் அவரது இருக்கையில் அமர கேட்டுக்கொண்டதன் பேரில் அவர் அவரது இருக்கையில் அமர்ந்து கொண்டார். அவரது இருக்கைக்கு இடது புறம் இருந்த மர ரேக்கில் அலுவலக கோப்புகள் மற்றும் நகர் ஊரமைப்பு தொடர்பான சட்ட புத்தகங்களும் இருந்தது. அதன்பிறகு, மேற்படி அறையில் உதவி இயக்குநரின் Executive டேபிளை சோதனை செய்தபோது அதில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை. உதவி இயக்குநர் திருமதி.சபரிபிரியங்கா அவர்கள் கரூர் மாவட்ட நகர் அமைப்பு உதவி இயக்குநராக கடந்த 17.02.2026 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். இந்த சோதனையின் போது மேற்படி

உதவி இயக்குநர் திருமதி.சபரிபிரியங்கா மற்றும் அலுவலக பணியாளர்களை சந்திப்பதற்காக அலுவலகம் வந்த கீழ்க்கண்ட நபர்களை விசாரித்தபோது அவர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகைகள் காணப்பட்டது.

வ. எண்	பெயர் மற்றும் முகவரி	காணப்பட்ட தொகை (ரூபாய்)	அவர்களது விளக்கம்
1.	திரு.கேசவன், (வயது.23/2026), த/பெ.ஸ்ரீனிவாசன், கதவு எண்.32, அரிக்காரம்பாளையம், LNS அஞ்சல், கரூர்.	8,500/-	தான் கரூர் டவுன் 80 அடி ரோட்டில் உள்ள ராம் பில்ட்ர்ஸ், திரு.ராம்பிரசாத், பதிவு பெற்ற பொறியாளரிடம் இளநிலை பொறியாளராக சுமார் 5 வருடமாக பணிபுரிந்து வருவதாகவும் திரு.ராஜேஷ் குமார் என்பவரது பெயரில் காதப்பாறையில் உள்ள நிலத்தில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கேட்டு இரண்டு வாரங்களுக்கு முன்பு ஆன்லைன் மூலம் விண்ணப்பித்ததாகவும் இதுவரை அனுமதி கிடைக்காததால் அது சம்மந்தமாக மேற்பார்வையாளர் திரு.பிரகாசன் என்பவர் மூலம் உதவி இயக்குநரை சந்திக்க வந்ததாகவும், நகரமைப்பு அலுவலக செலவிற்காக ரூ.8,500/- கொண்டுவந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவர் அவரது சட்டைப்பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.100/- எடுத்து ஆஜர் செய்து, அந்த தனது செலவிற்கு வைத்திருப்பதாக சொன்னதால் அந்த பணத்தை சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு.தங்கமூர்த்தி, (வயது.50/2026), த/பெ.ராமசாமி, நாடக்காபட்டி, தோகைமலை அஞ்சல், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.	11,500/-	தான் தோகைமலை கிராமம் நாடக்காபட்டியில் சுமார் 10 வருடத்திற்கு முன்பு அனுமதியற்ற மனைப்பிரிவு போட்டதாகவும் அதில் 9 மனைப்பிரிவுகள் விற்பனையாகவில்லை என்றும் அதற்கு கடந்த 15 நாட்களுக்கு முன்பு கரூர் 80 அடி ரோட்டில் உள்ள வேல் பில்டர்ஸ் திரு.கௌதம் என்ற பதிவு பெற்ற பொறியாளர் மூலம் ஆன்லைனில் விண்ணப்பித்ததாகவும் அதற்கு இதுவரை அனுமதி கிடைக்காததால் அது சம்மந்தமாக மேற்பார்வையாளர் திரு.பிரகாசன் என்பவர் மூலம் உதவி இயக்குநரை சந்திக்க வந்ததாகவும், நகரமைப்பு அலுவலக செலவிற்காக ரூ.11,500/- கொண்டுவந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவர் அவரது சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.200/- எடுத்து ஆஜர் செய்து, அந்த தனது செலவிற்கு வைத்திருப்பதாக சொன்னதால் அந்த பணத்தை சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

3.	திரு.சதீஸ், (வயது.29/2026), த/பெ.சிவசாமி, கதவு எண்.2B, காந்தி நகர், சுக்காலியூர் அஞ்சல், கரூர் வட்டம், கரூர் மாவட்டம்.	5,000/-	தான் கரூர் டவுன் சின்ன ஆண்டான் கோவிலில் உள்ள VN பில்டர்ஸ் திரு.சந்திரசேகர் என்பவரிடம் சுமார் 5 வருடமாக பணிபுரிந்து வருவதாகவும் AT மோகன் மற்றும் 7 நபர்களது பெயரில் ஆண்டாங்கோவில் கிழக்கில் உள்ள நிலத்தில் அப்பார்ட்மெண்ட் கட்டுவதற்கு அனுமதி கேட்டு இரண்டு வாரங்களுக்கு முன்பு ஆன்லைன் மூலம் விண்ணப்பித்ததாகவும் இதுவரை அனுமதி கிடைக்காததால் அது சம்மந்தமாக சர்வேயர் திரு.விஜயகுமார் என்பவர் மூலம் உதவி இயக்குநரை சந்திக்க வந்ததாகவும், நகரமைப்பு அலுவலக செலவிற்காக ரூ.5,000/- கொண்டுவந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவர் அவரது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.150/- எடுத்து ஆஜர் செய்து, அந்த தனது செலவிற்கு வைத்திருப்பதாக சொன்னதால் அந்த பணத்தை சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி மூவரும் நகரமைப்பு துறை அலுவலர்களுக்கு அலுவலக செலவுக்காக கொண்டு வந்த பணம் என்று சொன்னதால் அந்த தொகை ரூ.25,000/-ஐ விசாரணைக்காக காவல் துணை கண்காணிப்பாளரால் அரசு சாட்சிகளான எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திரு.கேசவன், திரு.தங்கமூர்த்தி மற்றும் திரு.சதீஸ் ஆகியோர்களை விசாரித்து அவர்களிடம் வாக்குமூலம் தனித்தனியாக பெறப்பட்டது. மேற்படி அலுவலக ஹாலின் தெற்கு பக்கம் டைனிங் ஹாலும், அந்த ஹாலுக்கு மேற்கு பக்கம் கிழக்கு பார்த்தவாறு மூன்று பதிவறைகளும் காணப்பட்டது. அந்த அறைகளை சோதனை செய்தபோது அதில் கைப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை. இந்த சோதனையின் போது, மேற்படி அறைகளில் பணியில் இருந்த கீழ்க்கண்ட அலுவலர்களை சோதனை செய்ததில், அவர்களிடம் நேர் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைகள் காணப்பட்டது.

வ. எண்	பெயர்/பதவி	காணப்பட்ட தொகை (ரூபாய்)	காணப்பட்ட இடம்
1.	திருமதி.சபரிபிரியங்கா, உதவி இயக்குநர்	400/-	மணி பர்ஸ்
2.	திருமதி.கிருஷ்ணஜோதி, உதவியாளர்	150/-	ஹேண்ட் பேக்
3.	திரு.கோபாலகிருஷ்ணன் சர்வேயர்	750/-	பேண்ட் பாக்கெட் மணி பர்ஸ்

4.	திரு.சதீஸ், தட்டச்சர்	350/-	பேண்ட் பாக்கெட் மணி பர்ஸ்
5.	திரு.விஜயகுமார், சர்வேயர்	720/-	பேண்ட் பாக்கெட் மணி பர்ஸ்
6.	திருமதி.பைஜீன்னிஷா, மேற்பார்வையாளர்	1500/-	ஹேண்ட் பேக்
7.	திரு.பூபதி, வரைவாளர் நிலை-3	500/-	பேண்ட் பாக்கெட் மணி பர்ஸ்
8.	திரு.பூபாலகிருஷ்ணன், வரைவாளர் நிலை-3	20/-	பேண்ட் பாக்கெட் மணி பர்ஸ்
9.	திரு.பிரகாசன், மேற்பார்வையாளர்	615/-	பேண்ட் பாக்கெட் மணி பர்ஸ்
10.	திரு.செல்வராஜ், அலுவலக உதவியாளர்	200/-	பேண்ட் பாக்கெட் மணி பர்ஸ்
11.	திரு.மாணிக்கம், உதவி இயக்குநரின் வாகன ஓட்டுநர்	200/-	பேண்ட் பாக்கெட் மணி பர்ஸ்

மேற்படி வரிசை எண்.1 முதல் 11 வரை உள்ள தொகைகள் அவர்களின் சொந்த தொகைகள் என்றும், இன்று காலை அலுவலகம் வந்தபோது செலவுக்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார்கள். அவர்களின் விளக்கம் ஏற்றுகொள்ளதக்க வகையில் இருந்ததால் மேற்படி தொகைகளை அலுவலர்கள் வசமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பிறகு, மேற்படி வரிசை எண்.1 முதல் 11 வரை உள்ள அலுவலர்களின் கைப்பேசியை அரசு சாட்சிகள் முன்னிலையில் வாங்கி அவர்களது போன் பே மற்றும் ஜி பே ஆகியவற்றில் உள்ள பணப்பரிவர்த்தணைகளை சோதனை செய்த போது அதில் திரு.பூபாலகிருஷ்ணன், வரைவாளர் நிலை-3 என்பவருடைய கைப்பேசி எண்.9751992788 செல்போனில் இருந்த கனரா வங்கி செயலியை சோதனை செய்தபோது சந்தேகத்திற்கிடமான வகையில் பல்வேறு நபர்களிடமிருந்து பல்வேறு தேதிகளில் ரூ.87,000/- பணத்தை அவரது வங்கி கணக்கு மூலம் பெற்றிருப்பது தெரியவந்தது. இது பற்றி அவரிடம் விசாரித்தபோது, அவர் முன்னுக்கு பின் முரணாக தெரிவித்தார்.

அதன்பிறகு கட்டிட அனுமதி, மனைப்பிரிவு ஒப்புதல் சம்மந்தமாக ஆன்லைன் மூலம் அல்லது நேரடியாக பெறப்பட்ட மனுக்கள் ஏதேனும் நிலுவையில் உள்ளதா என்று உதவி இயக்குநர் திருமதி.சபரிபிரியங்கா என்பவரிடம் கேட்டபோது, அவர் மனைப்பிரிவு அனுமதி மற்றும் கட்டிட வரைபட திட்ட அனுமதி கேட்டு ஆன்லைன் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஒப்புதல் வழங்காமல் கீழ்க்கண்டவாறு நிலுவையில் உள்ளதாக தெரிவித்து சர்வேயர் திரு.விஜயகுமார் மற்றும் உதவியாளர் திருமதி.கிருஷ்ணஜோதி ஆகியோர்கள் பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்தனர்.

வ. எண்	வகைகள்	45 நாட்களுக் குள் நிலுவையில் உள்ள விண்ணப்பங் கள்	45 நாட்களுக்கு மேல் நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள்	உதவி இயக்குநரின் விளக்கம்
1.	மனைப்பிரிவு அனுமதி **(விண்ணப்ப தாரர்கள் தரப்பில்)**	57 **(பக்கம் 1 முதல் 4 வரை)**	33 17.05.2025 முதல் தற்போது வரை **(பக்கம் 1 முதல் 4 வரை)**	மனைப்பிரிவு அனுமதி கேட்டு ஆன்லைன் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்களில் 45 நாட்களுக்கு மேல் 33 விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர் தரப்பில் நிலுவையில் உள்ளது என்றும் அதில் 23 விண்ணப்பங்களுக்கு முதல் நிலை ஒப்புதல் வழங்கப்பட்டு விட்டதாகவும், அதற்கு விண்ணப்பதாரர்கள் பொதுப்பாதையை அரசுக்கு ஒப்படைத்து ஆவணங்கள் சமர்பிக்காததால் நிலுவையில் உள்ளதாகவும், மீதி 10 விண்ணப்பங்கள் போதிய ஆவணங்கள் சமர்பிக்காததால் நிலுவையில் உள்ளதாக தெரிவித்தார்.
2.	மனைப்பிரிவு அனுமதி **(அலுவலக தரப்பில்)**	4 **(பக்கம் 1 & 2)**	இல்லை	
3.	கட்டிட வரைபட திட்ட அனுமதி **(விண்ணப்ப தாரர்கள் தரப்பில்)**	27 **(பக்கம் 1 & 2)**	17 11.01.2024 முதல் தற்போது வரை **(பக்கம் 1 & 2)**	கட்டிட வரைபட அனுமதி கேட்டு ஆன்லைன் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்களில் 45 நாட்களுக்கு மேல் 17 விண்ணங்கள் நிலுவையில் உள்ளது என்றும் அதில் 8 விண்ணப்பங்கள் போதிய ஆவணங்கள் சமர்பிக்காததால் நிலுவையில் உள்ளதாகவும் மீதி விண்ணப்பங்கள் அரசுக்கு செலுத்தவேண்டிய தொகையை செலுத்தாததால் நிலுவையில் உள்ளதாக தெரிவித்தார்.
4.	கட்டிட வரைபட திட்ட அனுமதி **(அலுவலக தரப்பில்)**	3 **(பக்கம் 1 & 2)**	இல்லை	

மேற்கண்ட மனைப்பிரிவு அனுமதி மற்றும் கட்டிட வரைபட திட்ட அனுமதி கேட்டு ஆன்லைன் மூலம் பெறப்பட்ட நிலுவை விண்ணப்பங்கள் பட்டியலை உதவியாளர் திருமதி.கிருஷ்ணஜோதி மூலம் அலுவலக கணினியில் இருந்து பிரிண்ட் எடுத்து அதில் அவர்

சுருக்கொப்பம் செய்து கொடுத்ததில் என்னோடு மற்றொரு அரசு சாட்சி, நகரமைப்பு உதவி இயக்குநர், மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் பக்கதிற்கு பக்கம் கையொப்பம் செய்து கொடுத்ததை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இந்த நடவடிக்கையின்போது, கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலக நிரந்தர / தற்காலிக பணியாளர்களின் வருகைப்பதிவேடு-2026 பார்வையிட்டபோது 23.10.2026-ம் தேதி மேற்கண்ட பணியாளர்கள் அனைவரும் அலுவலகம் வந்ததற்காக வருகை பதிவேட்டில் சுருக்கொப்பம் செய்துள்ளனர். மேற்படி அலுவக பணியாளர்கள் மற்றும் தற்காலிக பணியாளர் அக்டோபர் 2026 மாதத்தின் வருகை பதிவேட்டின் சான்றொப்பமிட்ட நகல் முறையே பக்கம் 1 முதல் 6 வரை மற்றும் பக்கம் 1 முதல் 4 வரை உள்ளதை கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி நகர் ஊரமைப்பு அலுவலக பணியாளர்களின் தினசரி கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டபோது அதில் 23.10.2026 வரை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலகம் வந்தபோது பணம் வைத்திருந்த விபரங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி பணியாளர்கள் பண கையிருப்பு பதிவேட்டின் சான்றொப்பமிட்ட நகல் பக்கம் 1 முதல் 6 வரை கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி நகர் ஊரமைப்பு அலுவலக பார்வையாளர்கள் பதிவேட்டை பார்வையிட்டபோது அதில் இன்று 23.10.2026 அலுவலகம் வந்த பார்வையாளர்களின் விபரங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி பார்வையாளர்கள் பதிவேட்டின் சான்றொப்பமிட்ட நகல் பக்கம் 1 முதல் 4 வரை கைப்பற்றப்பட்டது. மேற்படி அனைத்து பதிவேடுகளையும் உதவியாளர் திருமதி.கிருஷ்ணஜோதி என்பவர் மூலம் நகல் எடுத்து பக்கத்திற்கு பக்கம் அவர் சுருக்கொப்பம் செய்து ஆஜர் செய்ததில் நானும் மற்றொரு அரசு சாட்சி, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் கையொப்பம் செய்து கொடுத்ததை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலத்திற்கு கொடிநாள் நிதி இலக்கு ஏதேனும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா என்று உதவி இயக்குநர் அவர்களை கேட்டபோது அவர் உதவியாளர் திருமதி.கிருஷ்ணஜோதி என்பவர் மூலம் ஆஜர் செய்த கோப்பை பார்வையிட்டபோது, கடந்த 2025-2026 ஆம் ஆண்டிற்கு ரூ.11 லட்சம் கொடிநாள் நிதி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது, அதில் தற்போது வரை மேற்படி கொடிநாள் நிதி இலக்கு தொகை ரூ.7,70,000/- மட்டும் வசூல் செய்யப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டு விட்டதாக தெரிவித்தார். மேற்படி கொடிநாள் நிதி இலக்கு கணக்கு ஆவணம் பக்கம் 1 முதல் 8 வரை உள்ளதை பிரிண்ட் எடுத்து பக்கத்திற்கு பக்கம் அவர் சுருக்கொப்பம் செய்து ஆஜர் செய்ததில் நானும் மற்றொரு அரசு சாட்சி, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் கையொப்பம் செய்து கொடுத்ததை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கை, அலுவலக ஆவணங்களுக்கோ,

அலுவலர்களுக்கோ எந்தவித சேதாரமும், தொந்தரவுமின்றி நடத்தி முடிக்கப்பட்டதை சாட்சிகளாகிய எங்கள் முன்பு உறுதி செய்து கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கை கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து எடுத்துவரப்பட்ட மடிக்கணினியில் காவல் துணை கண்காணிப்பாளர் சொல்லச் சொல்ல பிற்பகல் 15.40 மணி முதல் இரவு 21.00 மணி வரை தலைமை காவலர் 2557 திரு.ராமமூர்த்தி அவர்களால் தட்டச்சு செய்து முடிக்கப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.25,000/- மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பணிபுரியும் திரு.பூபாலகிருஷ்ணன், வரைவாளர் நிலை-3 என்பவருடைய வங்கி கணக்கில் சந்தேகத்திற்கிடமான வகையில் பல்வேறு நபர்களிடமிருந்து பல்வேறு தேதிகளில் அவரது வங்கி கணக்கு மூலம் நடைபெற்ற பணப்பரிவர்த்தனை ரூ.87,000/- ஆகியவற்றை குறித்து மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். மேற்சொன்ன கைப்பற்றிய பணம் மற்றும் பணப்பரிவர்த்தனை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள Sd/- XXXXXXXXXX M.சங்கர், உதவியாளர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்நெறி வழிகாட்டு மையம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அலுவலகம், கரூர் மாவட்டம். நாள் 26/10/2026

Sir, Received the Computer typed complaint on 24.10.2026 at about 11.00 hrs, after getting suitable instructions form the superior officers and law officers of DVAC, Chennai, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.11/AC/2026 u/s 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at 12.00 hrs on 26.10.2026. Sd/- (XXXXXXXXXX) 26.10.2026 P.K.John, Deputy Suprentindent of Police, V & AC, Karur.

Original FIR along with the original computer typed complaint of Tr.M.Sankar, Assistant, O/o District Employment and Career Guidance Centre, Karur District are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

26/10/26

(P.K.John)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.